# திருநாரணன் திருவந்தாதி



**ஸோகநாயிகா சமேத த்ரிவிக்ரம நாராயணப் பரப்ரஹ்மமணே நம :**

புகுந்தான் அணுவின் அணுவி லெல்லாம்
உயர்ந்தான் உயர்வின் உயர்வி லெல்லாம்
ஒழித்தான் ஒழிவில்லா இப்பிறப் பிறப்பை
காழிச் சீராமத் துள்ளானே !!

**செங்கமலவல்லி நாயிகா சமேத ஆமருவியப்பன் திருவடிகளே சரணம்**

உளனெனில் உளனென்று ருரைத்தவர் அடிதொழுதோம்
உளனலன் னென்றுருரைத்தவர் உளனென்று உணர்வர்காண்
ஆயர் ஆநிரைக் காத்தவனை தேவர் தேரினை ஈர்த்தவனை
அயனரன் அமரரேத்தும் அழுந்தூர் அழகனைக் காணப்பெறின் !!

**<u>சுகந்தவல்லி நாயிகா சமேத பரிமளரங்கன் திருவடிக்ளே சரணம்</u>**

பெரியவனை பெருமானை இந்தளூர் இறையவனை

பரிமளனை பரிமுகனை  பாற்கடலாள் நாயகனை
சந்திரனை இந்திரனை காத்தவனை கருமுகிலை
மந்திரம்சொல் மறைமுனிவன் வார்த்தையினால் பேசு

**<u>அபிஷேகவல்லி நாயிகா சமேத பக்தவத்சல பரப்ரஹ்மணே நம :</u>**

பேசுவாய் நன்னெஞ்சே கண்ணமங்கை காவலனை
நேசமோடு தேனீயாய் அமரர் போற்றும் கோவலனை
பக்தருக்காய் பரியும் பத்தராவிப் பெருமானை
எத்திறமும் மறவாதே பணிவுடனே வணங்கி !!

**<u>லோகநாயிகா சமேத சியாமளமேனி பெருமாள் திருவடிகளே சரணம்</u>**

வணங்கினர் மாமறையோர் விண்ணவர் மற்றுளரெல்லாம்
குணங்குறை யற்றானை குன்றேந்திய குணக்குன்றை
மண்ணுளோர் மயங்கும் கரிமாணிக்க மேனியனை
கண்ணங்குடியுள் கண்டார் கண்ணனைக் கண்டாரே !!

**<u>கண்ணபுர நாயகி சமேத சவரிப் பெருமாள் திருவடிகளே சரணம்</u>**

கண்டனன் கண்ணனை கார்முகிர்க் கேசனை
வண்டுலாம் பொழில்சூழ் கண்ணபுரத் தீசனை
அண்டினார்க் கருள்செயும் ஆயர்தம் மாயனை
கொண்டபெண்டிர் மக்களோ டேற்றினர் உய்வரே !!

**<u>சௌந்தர்யவல்லி நாயிகா சமேத சௌந்தர்யராஜ பரப்ரஹ்மணே நம :</u>**

உய்ந்தனன் நாகை அழகனைக் கண்டபோதிலே
உயர்ந்தனன் அவன் நாமமுரைத்த போதிலே
ஒழித்தனன் அகந்தயை தொலைத்தனன் பிறப்பினை
ஒழிவில் செயலானின் கடைக்கண் பார்வையில் !!

**<u>பத்மாசனவல்லி நாயிகா சமேத ஜெகத்ரக்ஷக பரப்ரஹ்மணே நம :</u>**

கடைக்கண் பார்வையினால் கண்டவரை மயக்கிடுவான்
மடைதிறந்த வெள்ளமதாய் மானிடர்க்கருள் புரிவான்
அடைக்கலமென் றடைந்தேன் வையங்காத்த வராகனை
கடையனுள்ளும் கடையேன் எனக்குமருள் புரிந்தானே !!

**தஞ்சை நாயகி சமேத வீர நரசிங்க பரப்ரஹ்மணே நம :**

புரிந்தோர்க்கும் புரியாதார்க்கும் புரிதலாய் இருப்பவனை
அறிந்தோர்க்கும் அறியாதார்க்கும் அறிதலாய் இருப்பவனை
அந்தியம்போதில் அரியுருவாகி அரியை அழித்தவனை
தஞ்சையாளும் கோளரிவீரனை அடைவாய் நீ நன்னெஞ்சே !!

**செங்கமலவல்லி நாயிகா சமேத நீலமேகன் திருவடிகளே சரணம்**
**அம்புஜவல்லி நாயிகா சமேத மணிக்குன்ற நாதன் திருவடிகளே சரணம்**

நன்னெஞ்சே நீயறிவாய் நம்சிங்கன் அருகிருக்கும்
மாமலராளோடு மகிழ்ந்துறையும் நீல மேகனை
தூயத்துழாய் மார்வன் மணிக்குன்ற நாதனை
எந்நாளும் மறவாமல் பணிந்து !!

**ஹேமாம்புஜவல்லி நாயிகா சமேத வல்வில்ராமன் திருவடிகளே சரணம்**

பணிந்தேன் வல்லானை வில்லானை ஓர்சொல்லானை
விழுந்தேன் புழு]வாய் அவன் ஈடில்லா யிணையடியில்
எழுந்தேனென் எழுபிறப்பும் தொலைத்தே - அந்நொடியில்
துணிந்தேனென் தேவுவேறில்லை என்றே உணர்ந்து

**ரமாமணிவல்லி நாயிகா சமேத கஜேந்திர வரத பரப்ரஹ்மணே நம :**

உணர்த்தினான் உயர்வற உயர்நலம் உடையவன் தானென்று
குணத்தினால் உயர்ந்த யானை கஜேந்திரனுக் கீந்ததை
உயர்த்தினான் மயர்வற மதிநலம் எனக்கே தந்து - அக்
கணத்தில்நான் துயரற எய்தினன் இன்பமே !!

**பூரணவல்லி நாயிகா சமேத ஹரசாபவிமோசன பரப்ரஹ்மணே நம :**

எய்தினான் இன்பமே பிரமகபாலம் தொலைத்தவீசனே
தொழுதகைய்யும் அழுதகண்ணும் கொண்டமேனியான்
கொண்டபெண்டிர் மக்களோடு இருந்து ஏத்திடும்
கண்டியூர் தெய்வமல்லால் தெய்வமில்லை உண்மையே !! 14 / 07 / 2015

இது கண்டியூர் நம்ப ஆத்து பெருமாள் என்று கேட்ட பின்னர் எழுதியது :

பிச்சியை உச்சியில்வைத்து பித்தனார் திரிதந்துண்ணும்

அச்சுமைப் பாவம்போக்க அத்தனே ஐயனேயென்னு

உண்டிகேட்டு பெண்டிர்மக்கள் சூழநின்றே போற்றும்

கண்டியூர் தேவனல்லால் தேவனில்லை புவியின்மீதே !

இன்னிக்கி பாட்டு எழுதிய பின்னால் பழைய பாடலை திருப்பி refer பண்ணா

கடைசி வரி என்னை கலக்கி விட்டது. அப்படி ஒரே வார்த்தை பிரயோகம் !1

கண்டியூர் தெய்வமல்லால் தெய்வமில்லை

கண்டியூர் தேவனல்லால் தேவனில்லை